முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,
**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.
2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24 ஆம் நாள் புதன்கிழமை

**இடைநிலை மனு எண்.03/2026**
**IN**
**அசல் வழக்கு எண்.372/2015**

1. ஆறுமுகவேல் (இறப்பு) ... வாதி
2. அழகம்மாள்
3. மேடைமணிமுத்து
4. தாமரைக்கண்ணன்
5. பூமாரி ...மனுதாரர்கள்/உத்தேச 2 முதல் 5 வாதிகள்

/எதிர்/

1. பசும்பொன்
2. குருநாதன் ... 1, 2 எதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள்

3. பாலமுருகன் ...3 ம் எதிர்மனுதாரர்/உத்தேச 3 ம் பிரதிவாதி

இம்மனுவானது 17.06.2026 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ரவிசங்கர் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.R.P.பழனி அவர்கள் ஆஜராகியும், 3 ம் எதிர்மனுதாரருக்கு செய்தித்தாள் மூலமாக அறிவிப்பு சார்பு செய்யப்பட்டும் இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் 3 ம் எதிர்மனுதாரர் 15.06.2026 அன்று இந்நீதிமன்றத்தால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு No Counter என மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையிலும், மனு மற்றும் அசல் வழக்கு கோப்பினை பரிசீலனை செய்தும், மனுதாரர்கள் தரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.06.24 18:42:45 +0530

**உத்தரவு**

இம்மனுவானது, மனுதாரர்கள் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 22 விதி 3 மற்றும் பிரிவு 151–ன்படி, இவ்வழக்கில் இறந்துபோன 1ம் வாதியின் வாரிசுகளான 2 முதல் 5 மனுதாரர்களை இவ்வழக்கில் உத்தேச 2 முதல் 5 வாதிகளாகவும், 3ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுடன் வழக்கு நடத்த முன்வராத காரணத்தினால் 3ம் எதிர்மனுதாரரை உத்தேச 3ம் பிரதிவாதியாகவும் வாரிசுகள் நிலையில் கட்சி சேர்த்துக்கொள்ள அனுமதியளித்து உத்தரவிடவேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்** :–

வாதி 1, 2 பிரதிவாதிகள் மீது விளம்புகை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கு நிலுவையில் இருந்து வந்த நிலையில், வாதி கடந்த 08.03.2026 தேதியில் மனுதாரர்களையும், 3ம் எதிர்மனுதாரரையும் தனது அடுத்த வாரிசுகளாக விட்டு இறந்துபோய்விட்டார் என்றும், மேற்படி 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி மனுதாரர்களுடன் வழக்கு நடத்த முன்வராத காரணத்தால், மேற்படியாரை இவ்வழக்கில் 3ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்க வேண்டியதாயிருக்கிறது என்றும், மேற்படி இறந்துபோன வாதியின் வாரிசுகளான மனுதாரர்களும், 3ம் எதிர்மனுதாரரும் மட்டுமே இறந்துபோன 1ம் வாதியின் எஸ்டேட்டுகளை அடைந்து அனுபவம் செய்து வருவதாகவும், மனுதாரர்களையும், 3ம் எதிர்மனுதாரரையும் தவிர இறந்துபோன 1ம் வாதிக்கு எவ்வித வாரிசுகளும் கிடையாது என்றும், ஆகையால், இவ்வழக்கில் இறந்துபோன 1ம் வாதியின் வாரிசுகளான 2 முதல் 5 மனுதாரர்களை இவ்வழக்கில் உத்தேச 2 முதல் 5 வாதிகளாகவும், 3ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுடன் வழக்கு நடத்த முன்வராத காரணத்தினால் 3ம் எதிர்மனுதாரரை உத்தேச 3ம் பிரதிவாதியாகவும் வாரிசுகள் நிலையில் கட்சி சேர்த்துக்கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இம்மனுவின் 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் No Counter என கற்றறிந்த வழக்கறிஞரால் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

3) **தீர்வுக்குரிய பிரச்சனை:-**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.06.24 18:42:54 +0530

4) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, அசல் வழக்கு கோப்பு மற்றும் மனுதாரர்கள் தரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) மனுதாரர்களால் இம்மனுவானது இவ்வழக்கில் இறந்துபோன 1ம் வாதியின் வாரிசுகளான 2 முதல் 5 மனுதாரர்களை இவ்வழக்கில் உத்தேச 2 முதல் 5 வாதிகளாகவும், 3ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுடன் வழக்கு நடத்த முன்வராத காரணத்தினால் 3ம் எதிர்மனுதாரரை உத்தேச 3ம் பிரதிவாதியாகவும் வாரிசுகள் நிலையில் கட்சி சேர்த்துக்கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) இம்மனுவின் மனுதாரர்கள் தரப்பில், வாதி கடந்த 08.03.2026 தேதியில் மனுதாரர்களையும், 3ம் எதிர்மனுதாரரையும் தனது அடுத்த வாரிசுகளாக விட்டு இறந்துபோய்விட்டார் என்றும், மனுதாரர்களையும், 3ம் எதிர்மனுதாரரையும் தவிர இறந்துபோன 1ம் வாதிக்கு எவ்வித வாரிசுகளும் கிடையாது என்றும் காரணம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்மனுவிற்கு 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்படவில்லை.

7) இந்நிலையில், அசல் வழக்கின் முழுமையான நீதிமுறை தீர்மானிப்பிற்கு இறந்துபோன 1ம் வாதியின் வாரிசுகளான 2 முதல் 5 மனுதாரர்களையும், 3ம் எதிர்மனுதாரரையும் வாரிசுகளாக அசல் வழக்கில் கட்சி சேர்க்க வேண்டியது அவசியம் என்பதால் இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

8) **<u>இறுதியாக:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. தரப்பினர்கள் தங்களது செலவுத் தொகையை தாங்களே ஏற்றுக்கொள்ளவேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.24 18:43:03 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> :–** இல்லை –

ALIMA M Digitally signed by ALIMA M
Date: 2026.06.24 18:43:10 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சங்கரன்கோவில்.**

**மு.மா.உ. நீதிமன்றம்,**
**சங்கரன்கோவில்,**

I.A.No.03/2026
in
O.S.No.372/2015
உத்தரவு (Draft / Fair)

நாள் : 24.06.2026